## PRIMA AGRO LTD

CIN:L15331KL1987PLC004833

Registered Office: Door No. XVII/639A, Industrial Development Area, Muppathadam, Edayar, Cochin-683 110

Extracts of Un-audited Financial results(Standalone & Consolidated) for the quarter and Nine months ended 31st December, 2021

Security Code- 519262 (Figures in Million except for EPS)

| Particulars | Quarter Ended | | Nine Months Ended | | Year Ended |
|---|---|---|---|---|---|
| Period Ending | 31.12.2021 | 31.12.2020 | 31.12.2021 | 31.12.2020 | 31.03.2021 |
| Type | Un-Audited | Un-Audited | Un-Audited | Un-Audited | Audited |
| Operating Income | 39.65 | 39.02 | 125.9 | 115.27 | 156.68 |
| Other Income | 2.24 | 0.77 | 3.86 | 3.3 | 18.06 |
| **Total Income (1+2)** | **41.89** | **39.79** | **129.76** | **118.57** | **174.74** |
| Profit before tax | 3.63 | 11.83 | 29.37 | 34.29 | 54.93 |
| Tax | 1.50 | 3.25 | 9.00 | 9.56 | 16.39 |
| **Net Profit** | **2.13** | **8.58** | **20.37** | **24.73** | **38.54** |
| **Paid up equity share capital(No. of Shares) (Face value per share Rs.10 each)** | **5.195** | **5.195** | **5.195** | **5.195** | **5.195** |
| Basic EPS after Extraordinary items | .70 | 1.65 | 5.65 | 4.76 | 10.54 |
| Diluted EPS after Extra ordinary items | .41 | 1.65 | 3.92 | 4.76 | 7.42 |

**Notes**

1.The above financial results have been reviewed by the Audit Committee and approved by the Board of Directors at their respective meetings held on 11.02.2022 and have reviewed by the Statutory Auditors of the Company.

2.The above results have been prepared in accordance with the principles and procedures of Ind-AS as notified under the Companies ( Indian Accounting Standards)Rules, 2015 as specified under section 133 of the Companies Act, 2013.

3.The above is an extract of the detailed format of Financial Results(Standalone & Consolidated) filed with the Stock Exchange under Regulation 33 of the Securities Exchange Board of India(Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015. Both, Standalone and Consolidated financial results are same as shown above.The full format of the financial results are available on the stock exchange website (www.bseindia.com) and Company's web site (www.primaagro.in).

4.The Company does not have exceptional and extraordinary item to report for the above period.

5.Previous Quarter/Year figures have been regrouped/ reclassified and rearranged whereever necessary to make them comparable.

6. EPS is calculated before providing Preference Dividend of Rs.15 Lakhs per quarter.Basic and diluted EPS are not annualised for the quarter and nine months ended results.

**For Prima Agro Limited**
**S.K.Gupta**
**Chairman & Managing Director**

**Cochin**
**11.02.2022.**

## PRIMA INDUSTRIES LIMITED

CIN:L15142KL1994PLC008368

Registered Office: Door No. V/679 C, Industrial Development Area, Muppathadam, Edayar, Cochin-683 110

Extracts of Un-audited Financial results (Standalone & Consolidated) for the quarter and Nine months ended 31st December, 2021

| Security Code- 531246 | ( Figures in Million except for EPS ) | | | | |
|---|---|---|---|---|---|
| Particulars | Quarter Ended | | Nine months ended | | Year Ended |
| Period Ending | 31.12.2021 | 31.12.2020 | 31.12.2021 | 31.12.2020 | 31.03.2021 |
| Type | Un-Audited | Un-Audited | Un-Audited | Un-Audited | Audited |
| Operating Income | 51.73 | 49.72 | 123.15 | 127.38 | 176.8 |
| Other Income | 0.01 | 0.01 | 0.02 | 0.04 | 0.84 |
| **Profit before tax** | **6.27** | **11.14** | **45.03** | **26.95** | **36.47** |
| Tax | 2.30 | 0.00 | 7.6 | 0.00 | 1.17 |
| **Net Profit** | **3.97** | **11.14** | **37.43** | **26.95** | **37.64** |
| **Paid up equity share capital (No. of Shares)(Face value per share Rs.10 each)** | **10.79** | **10.79** | **10.79** | **10.79** | **10.79** |
| Basic EPS after Extra Ordinary items | 0.58 | 1.03 | 4.17 | 2.5 | 3.49 |
| Diluted EPS after Extra Ordinary items | 0.58 | 1.03 | 2.44 | 2.5 | 3.49 |

**Notes**

1.The above financial results have been reviewed by the Audit Committee and approved by the Board of Directors at their respective meetings held on 11.02.2022 and have reviewed by the Statutory Auditors of the Company.

2.The above results have been prepared in accordance with the principles and procedures of Ind-AS as notified under the Companies ( Indian Accounting Standards)Rules, 2015 as specified under section 133 of the Companies Act, 2013.

3.The above is an extract of the detailed format of Financial Results(Standalone & Consolidated) filed with the Stock Exchange under Regulation 33 of the Securities Exchange Board of India(Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015. Both, Standalone and Consolidated financial results are same as shown above.The full format of the financial results are available on the stock exchange website (www.bseindia.com) and Company's web site (www.primaindustries.in)

4.The Company does not have exceptional and extraordinary item to report for the above period.

5.Previous Quarter/Year figures have been regrouped/ reclassified and rearranged whereever necessary to correspond with the current quarter's/year's classification or disclosure

6. EPS is calculated before providing Preference Dividend oF Rs. 28 Lakhs per quarter.

**For Prima Industries Ltd**
**S.K.Gupta**
**Chairman & Managing Director**

**Cochin**
**11.02.2022**

## NORTHERN RAILWAY

**CORRIGENDUM**

**Ref:- Tender Notice No. 72/2021-2022 Dated 27.01.2022**

**(i) Tender No. 14220857 due on 28.02.2022 (S.No. 5)**

In reference to above tenders, the due date has been extended from 28.02.2022 to 21.02.2022. All other terms and conditions remain unchanged.

The corrigendum has been published on website **www.ireps.gov.in**

**316/22**

**SERVING CUSTOMERS WITH A SMILE**

## EAST COAST RAILWAY

File No. DRM/Engg/KUR/21-22/ E-Tender/105 Dt.: 10.02.2022

Tender No. e-tender-HQ-KUR-277-2021 Dt.: 03.02.2022

**Description :** **PROPOSED REPAIRS OF COACH WATERING AND DRAINAGE SYSTEM ALONG WITH REPLACEMENT OF 2000 MTR. OLD G.I. HYDRANT LINE OF PITS WITH DUCTILE IRON PIPES AT PURI STATION UNDER THE JURISDICTION OF SENIOR DIVISIONAL ENGINEER/HEAD QUARTERS/KHURDA ROAD.**

**Approx cost of the work :** **₹ 96.00 Lakhs**, EMD: **₹ 1,92,000/-**, Completion period: **06 months.**

**Tender closing date & time :** at **1500 hrs.** of **25.02.2022.**

No manual offers sent by Post/Courier/Fax or in person shall be accepted against such e-tenders.

Complete information including e-tender documents of the above e-tender is available in website **http://www.ireps.gov.in**

**Note:** The prospective tenderers are advised to revisit the website 10 (Ten) days before the date of closing of tender to note any changes/ corrigenda issued for this tender.

**Divisional Railway Manager (Engg), Khurda Road**

**PR-808/M/21-22**

## Stanpacks (India) Limited

**Regd. Office : "S.K.Enclave" New No.4 (Old No.47), Nowroji Road, Chetpet, Chennai - 600 031.**
**CIN - L36991TN1991PLC021888, Website: www.stanpacks.in,**
**Email: info@blissgroup.com Tel: 91-44-26452325; Fax: 91-44-26451720**

**EXTRACT OF UNAUDITED FINANCIAL RESULTS FOR THE QUARTER ENDED 31.12.2021**

(Rs. In lakhs except EPS)

| Sl. No. | Particulars | 3 Months ended 31.12.2021 | 9 Months ended 31.12.2021 | Corresponding 3 months ended 31.12.2020 |
|---|---|---|---|---|
| | | Un Audited | Un Audited | Un Audited |
| 1 | Total Income from Operations | 958.35 | 2,950.85 | 781.08 |
| 2 | Net Profit / (Loss) for the period (before Tax, Exceptional and/or Extraordinary items) | 2.05 | 13.74 | (9.50) |
| 3 | Net Profit / (Loss) for the period before tax (after Exceptional and/or Extraordinary items) | 2.05 | 13.74 | (9.50) |
| 4 | Net Profit / (Loss) for the period after tax (after Exceptional and/or Extraordinary items) | 2.05 | 13.74 | (9.50) |
| 5 | Total Comprehensive Income for the period | 2.05 | 13.74 | (9.50) |
| 6 | Equity Share Capital (Face Value of Rs.10 each fully paid up) | 609.60 | 609.60 | 609.60 |
| 7 | Reserves (excluding Revalution Reserve) as shown in the Balance Sheet | (438.52) | (438.52) | (317.48) |
| 8 | Earnings Per Share (of Rs. 10/- each) Basic & Diluted: | 0.03 | 0.23 | (0.16) |

**Note:** The above is an extract of the detailed format of Quarterly/Annual Financial Results filed with the Stock Exchanges under Regulation 33 of the SEBI (Listing and Other Disclosure Requirements) Regulations, 2015. The full format of the Quarterly/Annual Financial Results are available on the Stock Exchange websites URL-http://www.bseindia.com/stock-share-price/stanpacks-(india)-ltd/stanpack/530931/ and Company's website **www.stanpacks.in.**

**For and on behalf of the Board**
**G. V. Gopinath**
**Managing Director**

**Place : Chennai**
**Date : 11.02.2022**

POONAWALLA FINCORP

## POONAWALLA FINCORP LIMITED

(FORMERLY KNOWN AS MAGMA FINCORP LIMITED)

**CORPORATE OFFICE : 601, 6TH FLOOR, ZERO ONE IT PARK, SR. NO. 79/1, GHORPADI, MUNDHWA ROAD, PUNE – 411036**

**APPENDIX IV [SEE RULE 8(1)]**
**POSSESSION NOTICE**
**(FOR IMMOVABLE PROPERTY)**

Whereas, the undersigned being the Authorised Officer of Poonawalla Fincorp Limited (Formerly known as Magma Fincorp Limited) of the above Corporate/Register office under the Securitisation and Reconstruction of Financial Assets and Enforcement of Security Interest Act, 2002 (hereinafter referred as the "**said Act**") and in exercise of the powers conferred under Section 13 (2) of the said Act read with Rule 3 of the Security Interest (Enforcement) Rules 2002, issued a demand notice below dated calling upon the below Borrowers to repay the amount mentioned in the notice within 60 days from the date of receipt of the said notice.

The borrowers having failed to repay the amount, notice is hereby given to the borrowers and the public in general that the undersigned has taken symbolic possession of the property described herein below in exercise of powers conferred on him/her under Section 13 (4) of the said Act read with Rule 8 of the said rules of the Security Interest Enforcement Rules 2002 on this 11th day of February, of the year 2022.

The borrowers in particular and the public in general are hereby cautioned not to deal with the property and any dealings with the property will be subject to the charge of Poonawalla Fincorp Limited (Formerly known as Magma Fincorp Limited) the amount and interest thereon.

The borrower's attention is invited to provisions of sub-section (8) of section 13 of the Act, in respect of time available, to redeem the secured assets. Details of Property taken in possession are herein below :

| Sl. No. | Name of Borrowers | Description of Property | Symbolic Possession taken Date | Date of statutory Demand Notice | Amount in Demand Notice (Rs.) |
|---|---|---|---|---|---|
| 01 | **CHANDRASEKAR M, LAKSHMI** | ALL THAT PIECE AND PARCEL OF MORTGAGE PROPERTY OF LAND AND BUILDING, LAND MEASURING 1185 SQ.FT. COMPRISED IN SURVEY NO. 190/1, 190/5B, OF NO. 71, KONNUR VILLAGE, PLOT NO. 7B, JANAKIRAM REDDY COLONY, 1ST MAIN ROAD, BLOCK NO. 5, VILLIVAKAM, JANAKIRAM NAGAR, CHENNAI- 600049, SITUATED WTHIN THE SUB-REGISTRATION DISTRICT KONNUR AND REGISTRATION DISTRICT OF NORTH CHENNAI, BUTTED AND BOUNDED IN THE NORTH: PLOT NO. 6B & 7A, SOUTH: PLOT NO. 8A, EAST : 30 FT. RAMDOSS REDDY ROAD, WEST: PLOT NO. 4, T.S. NO. 26. | 11.02.2022 | 29.09.2021 | **Loan No. HL/0028/ H/14/000011** Rs. 27,51,021/- (Rupees Twenty Seven Lakhs Fifty One thousand twenty one Only) payable as on 29 Sep 2021 along with interest @ 15.30% till the realization. |

Authorised Officer
***Poonawalla Fincorp Ltd.***
(Formerly known as Magma Fincorp Limited)
(Signature)

Place : Chennai
Dated : 12.02.2022

**FORM A**

## PUBLIC ANNOUNCEMENT

(Regulation 14 of the Insolvency and Bankruptcy Board of India (Voluntary Liquidation Process) Regulations, 2017)

**FOR THE ATTENTION OF THE STAKEHOLDERS OF M/S.NADHI INFORMATION TECHNOLOGIES PRIVATE LIMITED**

| | | |
|---|---|---|
| 1. | Name of Corporate Person | Nadhi Information Technologies Private Limited |
| 2. | Date of Incorporation of Corporate Person | 6th September 2008 |
| 3. | Authority under which Corporate Person is incorporated/registered | Registrar of Companies, Chennai. Ministry of Corporate Affairs. |
| 4. | Corporate Identity Number/ Limited Liability Identity Number of Corporate Person | U72400TN2008PTC069180 |
| 5. | Address of the Registered Office and Principal Office (if any of Corporate Person) | New No. 4, Aswathi Apartment, Ground Floor, 2nd Crescent Park Street, Gandhi Nagar, Adyar, Chennai-600 020. |
| 6. | Liquidation commencement date of Corporate Person | 10th February 2022 |
| 7. | Name, address, email address Telephone Number and the Registration number of the Liquidator | Ms. Deepa Venkat Ramani, Office No.40, TNHB Complex, No.180, Luz Church Road, Mylapore, Chennai-600004. IBBI/IPA-002/IP-N00118/2017-2018-10287 Mobile : 9884040640 e-mail : deepa@ksmassociates.net; ip.ksmassociates@gmail.com |
| 8. | Last date for submission of claims | 12th March 2022 |

Notice is hereby given that M/s.Nadhi Information Technologies Private Limited has commenced voluntary liquidation on 10th February 2022.

The stakeholders of M/s.Nadhi Information Technologies Private Limited are hereby called upon to submit a proof of their claims, on or before 12.03.2022, to the Liquidator at the address mentioned against item 7.

The financial creditors shall submit their proof of claims by electronic means only. All other stakeholders may submit the proof of claims in person, by post or by electronic means.

Submission of false or misleading proofs of claim shall attract penalties.

Place: Chennai
Date : 11th February 2022.

**Deepa Venkat Ramani**

indianexpress.com



I arrive at a conclusion not an assumption.

Inform your opinion with detailed analysis.

The Indian Express.
For the Indian Intelligent.

The Indian EXPRESS
JOURNALISM OF COURAGE



திருவள்ளூர் மாவட்டம்,பொன்னேரி நகர்மன்ற உள்ளாட்சித் தேர்தலில் திமுக சார்பில் அக்கட்சியைச் சேர்ந்தவர்களும் தோழமைக் கட்சி சார்ந்தவர்களும் 27 வார்டுகளில் உறுப்பினர் பதவிக்கு உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடுகின்றனர்.பொன்னேரி நகர் மன்ற உள்ளாட்சித் தேர்தலில் 15வது வார்டு உறுப்பினராக போட்டியிடும் டாக்டர் பரிமளம் விஸ்வநாதன் வீதி வீதியாக சென்று தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். அவருடன் தி.மு.க.மீஞ்சூர் வடக்கு ஒன்றியச் செயலாளர் சுகுமாரன்,தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி எஸ்சி–எஸ்டி பிரிவு மாநில செயலாளர் எம்.கஜேந்திரன் உள்ளிட்டோர் வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர்.

# இந்தியாவில் 50 ஆயிரமாக குறைந்தது தினசரி கொரோனா பாதிப்பு!

**புதுடில்லி, பிப். 12-**

இந்தியாவில் தினசரி கொரோனா பாதிப்பு சரிந்து வரும் நிலையில், கடந்த 24 மணிநேரத்தில் புதிதாக 50,407 பேருக்கு கொரோனா தொற்று உறுதியாகியுள்ளது.

இந்தியாவில் ஜனவரி மாதத்தில் உச்சத்தில் இருந்த கொரோனா வைரஸ் பாதிப்பு, தற்போது நாளுக்கு நாள் மளமளவென குறைந்து வருகிறது. நேற்று முன்தினம் நாடு முழுவதும் 67 ஆயிரத்து 84 பேருக்கு தொற்று பாதிப்பு ஏற்பட்டது. நேற்று இந்த எண்ணிக்கை 58 ஆயிரத்து 77 ஆக சரிந்தது. இந்த நிலையில்



இன்று (12ம் தேதி) புதிதாக 50,407 பேருக்கு தொற்று பாதிப்பு உறுதியாகி உள்ளது. இது நேற்றைய பாதிப்பை விட 13 சதவீதம் குறைவானதாகும்.

இந்தியாவில் இன்று (12ம் தேதி) காலை 9:00 மணியுடன் முடிந்த, கடந்த 24 மணி நேரத்தில், கொரோனாவால் புதிதாக பாதித்தவர்கள், குணமடைந்தோர், பலியானோர், இறப்பு விகித நிலவரம் குறித்து மத்திய சுகாதார அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில், ‘இந்தியாவில், புதிதாக 58,077 பேர் பாதித்துள்ளனர்; இதன் மூலம், மொத்த பாதிப்பு எண்ணிக்கை 4,25,86,544 ஆக உயர்ந்தது. புதிதாக 804 பேர் இறந்துள்ளனர்; இதனால், நாட்டின்மொத்தஉயிரிழந்தோர் எண்ணிக்கை 5,07,981 ஆக உயர்ந்தது.

தொற்றில் இருந்து ஒரே நாளில் 1,36,962 பேர் குணமடைந்துள்ளனர்; இதனால் குணமடைந்தோர் எண்ணிக்கை 4,14,68,120 ஆக உயர்ந்துள்ளது. இந்தியாவில் குணமடைந்தோர் விகிதம் 97.37 சதவீதமாக உயர்ந்துள்ளது. உயிரிழந்தோர் விகிதம் 1.19 சதவீதமாக குறைந்துள்ளது. சிகிச்சை பெறுவோர் விகிதம் 1.43 சதவீதமாக குறைந்துள்ளது. இந்தியாவில் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்ட 6,10,443 பேருக்கு மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்படுகிறது.

இந்தியாவில் 172.29 கோடி கொரோனாதடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது.

## 100வது நாளாக பெட்ரோல், டீசல் விலையில் மாற்றம் இல்லை!



**சென்னை, பிப். 12-**

மத்திய அரசின் கலால் வரி குறைப்பால், தீபாவளிக்கு பெட்ரோல் விலை லிட்டருக்கு 5 ரூபாயும்; டீசல் 10 ரூபாயும் குறைந்த நிலையில், கடந்த 100 நாட்களாக அவற்றின் விலை மாற்றப்படாமல் உள்ளது.

சர்வதேச சந்தையில் நிலவும் கச்சா எண்ணெய் விலை, டாலருக்கு எதிரான இந்திய ரூபாயின் மதிப்பு ஆகியவற்றின் அடிப்படையில் பெட்ரோல், டீசல் விலையை இந்தியன் ஆயில், பாரத் பெட்ரோலியம், ஹிந்துஸ்தான் பெட்ரோலியம் பொதுத்துறை எண்ணெய் நிறுவனங்கள், உள்நாட்டில் பெட்ரோல், டீசல் விலையை தினமும் நிர்ணயம் செய்கின்றன. தீபாவளியை முன்னிட்டு, மத்திய அரசு நவ., 3 இரவில், பெட்ரோல், டீசல் மீதான கலால் வரியை அதிரடியாக குறைத்தது. இதனால், அடுத்த நாள் தீபாவளியன்று நாடு முழுதும் லிட்டர் பெட்ரோல் விலை ஐந்து ரூபாயும்; டீசல் விலை 10 ரூபாயும் சரிந்தது. அன்று தமிழகத்தில் லிட்டர் பெட்ரோல் 101.40 ரூபாய்க்கும்; டீசல், 91.43 ரூபாய்க்கும் விற்பனையாகின.

இன்று (பிப்.,12) வரை 100 நாட்களாகியும், பெட்ரோல், டீசல் விலையில் மாற்றம் இல்லை. இது, வாகன ஓட்டிகளிடம் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. தமிழகத்தில் மூன்று மாதங்களாக, எண்ணெய் நிறுவனங்கள் பெட்ரோல், டீசல் விலைகளை மாற்றாமல் உள்ளன. அதே நேரத்தில், உத்தரப் பிரதேசம், பஞ்சாப், கோவா, மணிப்பூர், உத்தரகாண்ட் ஐந்து மாநிலங்களில் சட்டசபை தேர்தல் நடைபெறுவதால் பெட்ரோல், டீசல், சமையல் எரிவாயு விலை உயரவில்லை. இந்த ஐந்து மாநிலங்களில் தேர்தல் முடிந்த பின், பெட்ரோல், டீசல் விலை உயர்த்தப்படலாம் என, எதிர்பார்க்கப்படுகிறது.

## பிப்., 19ல் தடுப்பூசி முகாம் நடைபெறாது: மா.சுப்பிரமணியன்!



**சென்னை, பிப். 12-**

‘‘நகர்ப்புற உள்ளாட்சித்தேர்தல் காரணமாக பிப்., 19ம் தேதி, விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளதால் அன்றைய தினம் தடுப்பூசி முகாம் நடைபெறாது,’’ என, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் கூறியுள்ளார்.

தமிழகம் முழுவதும் 22வது கொரோனா தடுப்பூசி முகாம் இன்று (12ம் தேதி) நடைபெற்றது. சென்னைராஜீவ்காந்தி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நடைபெற்ற முகாமை, மக்கள் நல்வாழ்வுதுறைஅமைச்சர் மா.சுப்பிரமணியன் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வுக்கு பின் செய்தியாளர்களிடம் அவர் கூறுகையில், ‘‘21 மெகா தடுப்பூசி முகாம்கள் 5 லட்சத்து 60 ஆயிரத்து 41 மையங்களில் நடத்தப்பட்டிருக்கிறது. இம்முகாம்களின் மூலம் 3 கோடியே 65 லட்சத்து 4 ஆயிரத்து 295 பேருக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டிருக்கிறது. தமிழகம் முழுவதும் இதுவரை 9 கோடியே 75 லட்சத்து 7 ஆயிரத்து 326 பேருக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. இதில் 18 வயதினைக் கடந்த 5 கோடியே 26 லட்சத்து 44 ஆயிரத்து 839 பேருக்கு முதல் தவணை தடுப்பூசி செலுத்தப்பட்டிருக்கிறது. இதுசதவீதஅடிப்படையில் 90.94 சதவீதமாகும். இதில் 2வது தவணை தடுப்பூசி 4 கோடியே 7 லட்சத்து 64 ஆயிரத்து 68 பேருக்கு செலுத்தப்பட்டிருக்கிறது. இது சதவீத அடிப்படையில் 70 சதவீதமாகும். முதல்தவணை தடுப்பூசி 90 சதவீதமும், 2வது தவணை தடுப்பூசி 70 சதவீதமும் தமிழகத்தில் சிறப்பான வகையில் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது.

தமிழகம் முழுவதும் 35 ஆயிரம் இடங்களில் இன்று (12ம் தேதி) தடுப்பூசி முகாம்கள் நடைபெறுகிறது. வழக்கமாக 50 ஆயிரம் இடங்களில் தடுப்பூசி முகாம்கள் நடத்தப்படும். இந்த முகாம்களில் பணியாற்றிடும் பணியாளர்கள் நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல் பணிகளிலும் ஈடுபட்டுள்ளதால் 35 ஆயிரம் இடங்களில் மட்டுமே தடுப்பூசி முகாம்கள் நடத்தப்படுகிறது. சென்னையில் 1600 இடங்களில் நடைபெற்ற தடுப்பூசி முகாம்கள் இன்று 500 இடங்களில் மட்டுமே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அடுத்த வாரம் 19- ஆம் தேதி சனிக்கிழமை தடுப்பூசி முகாம் நடத்தப்படமாட்டாது. நகர்ப்புறத் தேர்தல் காரணமாக அன்று விடு முறை அளிக்கப்பட்டிருக்கிறது. அரசு பொது மருத்துவமனைகள், அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் 24 மணிநேரமும் தடுப்பூசி செலுத்தப்பட்டு வருகிறது. இங்கு பொதுமக்கள் சென்று தடுப்பூசி செலுத்திக் கொள்ளலாம்,’’ என்றார்.

## தஞ்சையில் மூன்று இடங்களில் என்.ஐ.ஏ., அதிகாரிகள் சோதனை!

**தஞ்சை, பிப். 12-**

கிளாபத் அமைப்பின் தலைவர் மண்ணை பாபா புழல் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். இதன் தொடர்ச்சியாக தஞ்சையில் உள்ள இந்த அமைப்பைச் சேர்ந்தவர்கள் வீட்டில் என்.ஐ.ஏ., அதிகாரிகள் இன்று [12ம் தேதி] சோதனை நடத்தினர்.

தஞ்சாவூர் மாவட்டம் கீழவாசல் அருகே மகர்நோம்புச் சாவடி தைக்கால் தெரு பகுதியை சேர்ந்த அப்துல்காதர் மற்றும் முகம்மது யாசின் ஆகியோர் வீடுகளில் இன்று [12ம் தேதி] அதிகாலை 5 மணி முதல் தேசிய புலனாய்வு முகமை (NIA) அதிகாரிகள் சோதனையில் ஈடுபட்டனர்.

இவர்கள் இருவரும் சமூக ஊடகத்தில் தவறான தகவல்களை பரப்பியதாக கூறப்படுகிறது. மேலும், கிளாபத் அமைப்பின் தலைவர் மண்ணை பாபா புழல் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். இதன் தொடர்ச்சியாக இந்த அமைப்பைச் சேர்ந்தவர்கள் வீட்டில் தற்போது சோதனை நடைபெற்று வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. அதேபோல், தஞ்சை புதிய பேருந்து நிலையம் பகுதியை சேர்ந்த அகமது என்பவருது வீட்டிலும் என்.ஐ.ஏ அதிகாரிகள் சோதனை நடத்தினர். மொத்தம் மூன்று இடங்களில் சோதனை நடைபெற்றது. ஒரு இடத்திற்கு 3 பேர் வீதம் மூன்று இடங்களில் 9 அதிகாரிகள் சோதனையில் ஈடுபட்டனர். சுமார் 5 மணி நேரங்களுக்கும் மேலாக இந்த சோதனை நடைபெற்றது. சோதனையில் மொபைல் போன், ஹார்டுடிஸ்க், முக்கிய ஆவணங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

# சென்னையில் தங்கம் விலை கடும் உயர்வு!

**சென்னை, பிப். 12-**

சென்னையில் இன்று (12ம் தேதி) தங்கம் விலை, கிராமுக்கு, 344 ரூபாய் உயர்ந்து, சவரன், 37,224 ரூபாய்க்கு விற்பனையானது.

கொரோனா பெருந்தொற்றைத் தொடர்ந்து தொழில்துறை தேக்கம் ஏற்பட்டுள்ளது. முதலீட்டாளர்கள் பாதுகாப்பான முதலீடுகளில் கவனம் செலுத்த முடிவெடுத்து, பங்குச் சந்தை, ரியல் எஸ்டேட், அமெரிக்க டாலர்கள் என இருந்த முதலீடுகளை மாற்றித் தங்கத்தில் முதலீடு செய்யத் தொடங்கினர். இதனால் தங்கத்தின் தேவை அதிகரித்து, அதன் விலை கணிசமாக உயர்ந்து வந்தது. கரோனா வைரஸ் பாதிப்பால் ஏற்பட்ட பீதியாலும் தங்கம் விலையில் ஏற்ற இறக்கங்கள் நிலவி வந்தன.

அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளிலும் கரோனா எதிரொலியாக வங்கி வட்டி விகிதங்கள் பெருமளவு குறைந்துள்ளன. இதனால் அந்நாடுகளின் முதலீட்டாளர்கள், முதலீட்டு நிறுவனங்கள் தங்கத்தை வாங்கி வருகின்றன. இந்த நிலையில், வாரத்தின் முதல் நாளான திங்கள் முதல் தங்கம் விலை ஏற்ற இறக்கத்துடனே இருந்து வந்தநிலையில் தொடர்ந்து நான்காவது நாளாக இன்று (12ம் தேதி) விலை உயர்ந்துள்ளது. அதன்படி, சென்னையில் இன்று 22 காரட் ஆபரணத் தங்கம் ஒரு கிராம் 4,653 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. நேற்று மாலை ரூ.4610ஆக இருந்தது. இன்று கிராமுக்கு ரூ. 43 உயர்ந்துள்ளது.

இதனால், சவரனுக்கு ரூ.344 உயர்ந்து ரூ. 37,224க்கு விற்பனையாகிறது. இதேபோல் 24 காரட் சுத்தத் தங்கத்தின் விலை ஒரு கிராம் ரூ. 40,152க்கு விற்பனையாகிறது.


வெள்ளியின் விலை 80 பைசா உயர்ந்து ரூ 67.40க்கு விற்பனையாகிறது. ஒரு கிலோ வெள்ளியின்விலை இன்று ரூ. 67,400 ஆக உள்ளது.

# உக்ரைன் மீது ரஷ்யா படையெடுக்கும் அமெரிக்கா வெள்ளை மாளிகை தகவல்!

**வாஷிங்டன், பிப். 12-**

அடுத்த இரு நாட்களில் உக்ரைன் மீது ரஷ்யா தாக்குதல் நடத்தும் என, அமெரிக்காவின் வெள்ளை மாளிகை கணித்துள்ளது.

உக்ரைன் எல்லையில் ரஷ்ய ராணுவத்தின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. எல்லையில் சுமார் ஒரு லட்சம் வீரர்களை ரஷ்யா நிறுத்தியுள்ளது. எல்லையில் பதற்றமான சூழல் நிலவி வருவதால் ரஷ்யாவை சமாதானப்படுத்தும் முயற்சியில் பல்வேறு நாடுகளும் இறங்கியுள்ளன. ஆனால், எந்த சமாதானத்தையும் ஏற்காத ரஷ்யா இன்னும் இரண்டே நாட்களில் உக்ரைன் மீது போர் தொடுக்கும் என்று அமெரிக்க உளவு நிறுவனங்கள் கணித்துள்ளன. ஆகையால், அமெரிக்கர்கள் உடனடியாக உக்ரைனிலிருந்து வெளியேறும்படி எச்சரித்துள்ளன. முன்னதாக நேற்று, அமெரிக்க அதிபர் ஜோ



பைடன் தனது நாட்டு மக்கள் உக்ரைனில் இருந்து உடனே வெளியேறும்படி அறிவுறுத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது. இந்நிலையில், அடுத்தவாரம் பிரிட்டனின் பாதுகாப்புச் செயலர் மாஸ்கோ செல்கிறார். உக்ரைன், ரஷ்யா இடையே அமைதியை நிலைநாட்ட இந்தப் பயணத்தை அவர் மேற்கொள்கிறார். உக்ரைன் பதற்றத்தால் ஜப்பான் அரசும் தங்கள் நாட்டு மக்களை உடனடியாக திரும்புமாறு அழைப்பு விடுத்துள்ளது.


## ஸ்டேன்பேக்ஸ் (இந்தியா) லிமிடெட்

பதிவு அலுவலகம்: எஸ். கே. என்கிளேவ், புதிய எண் 4, (பழைய எண் 47) நெளரோஜி சாலை, சேத்துப்பட்டு, சென்னை - 600 031

CIN - L36991TN1991PLC021888, Website: www.stanpacks.in

Email: info@blissgroup.com Tel: 91-44-26452325; Fax: 91-44-26451720

31.12.2021-ல் முடிவடைந்த காலாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகள்

(ரூ. லட்சத்தில்)

| வ. எண் | விவரங்கள் | முடிவடைந்த 3 மாதங்கள் 31.12.2021 | முடிவடைந்த 9 மாதங்கள் 31.12.2021 | முடிவடைந்த 3 மாதங்கள் 31.12.2020 |
|---|---|---|---|---|
| | | தணிக்கை செய்யப்படாதது | தணிக்கை செய்யப்படாதது | தணிக்கை செய்யப்படாதது |
| 1 | மொத்த செயல்பாடுகள் மூலம் வருமானம் | 958.35 | 2,950.85 | 781.08 |
| 2 | இக்காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (வரிக்கு முன் சாதாரண மற்றும் அசாதாரண இனங்களுக்கு முன்) | 2.05 | 13.74 | (9.50) |
| 3 | இக்காலத்திற்கான வரிக்கு முன் நிகர லாபம் /(நஷ்டம்) (சாதாரண மற்றும் அசாதாரண இனங்களுக்கு பின்) | 2.05 | 13.74 | (9.50) |
| 4 | இக்காலத்திற்கான வரிக்கு பின் நிகர லாபம் / (நஷ்டம்) (சாதாரண மற்றும் அசாதாரண இனங்களுக்கு பின்) | 2.05 | 13.74 | (9.50) |
| 5 | இக்காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் | 2.05 | 13.74 | (9.50) |
| 6 | சமபங்கு முலதனம் (ஒவ்வொரு பங்கு ரூ.10/- ) | 609.60 | 609.60 | 609.60 |
| 7 | கையிருப்புகள் (முந்தைய ஆண்டு கணக்கில் மறுமதிப்பீடு கையிருப்புகள் நீங்கலாக) | (438.52) | (438.52) | (317.48) |
| 8 | பங்கு விகித ஈட்டுதொகை (ஒவ்வொரு பங்கு ரூ.10/-) (அசாதாரண இனங்களுக்கு முன்) அடிப்படை குறைமதிப்பு | 0.03 | 0.23 | (0.16) |


குறிப்பு : மேற்குறிப்பிடப்பட்டவைகள் 2015-ம் வருடத்திய SEBI (பொறுப்புகளை பட்டியலிடுதல் மற்றும் தேவைகள் வெளிப்படுத்துதல்) விதிமுறைகளில் 33-வது விதிமுறையின் கீழ், பங்கு வர்த்தக நிறுவனத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள காலாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளின் தேர்ந்தெடுக்கப்பட்டவைகள் ஆகும். காலாண்டு / முழு ஆண்டுக்கான நிதிநிலை முடிவுகளின் முழு படிவமும் கம்பெனியின் www.stanpacks.in என்ற இணையதளத்திலும், பங்கு வர்த்தக நிறுவனத்தின் URL-http://www.bseindia.com/stock-share-price/stanpacks-(india)-ltd/stanpack/530931/ என்ற இணையத்தளத்திலும் காணலாம்.

வாரியத்தின் சார்பாக
G.V.கோபிநாத்
நிர்வாக இயக்குநர்


இடம் : சென்னை
நாள் : 11.02.2022




## பலன் பெற்றோரின் பாராட்டுரைகள்!




**பக்கவாதம்:** இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு எனது வலது கையும்,காலும், செயலிழந்துவிட்டது.நான் ஏழை என்பதால் அதிக செலவு செய்யமுடியவில்லை. பிறகு ஆறுமாதமாக எந்த வேலையும் செய்ய முடியவில்லை பிறகு டிவி யின் மூலம் ரப்பானி வைத்தியசாலா விளம்பரத்தைப் பார்த்தேன் மருந்து சாப்பிட்டு இப்பொழுது நன்றாக இருக்கிறேன். ஆர்.ஜெயராமன்,புதுவாயல், பொன்னேரி வட்டம்.




**முடக்குவாதம்:** எனக்கு 6,7 வருடங்களாக உடல் முழுவதும் எல்லா மூட்டுகளிலும் வலியும், வேதனையும் இருந்தது. தோள், கழுத்து, முதுகு, இடுப்பு,கால் என்று எல்லா இடங்களிலும் வலி இருந்தது. இதன் காரணமாக வீட்டு வேலையைக்கூட என்னால் செய்ய முடியாது. பல மருத்துவர்களிடம் மருந்து சாப்பிட்டும் வலி நின்றபாடில்லை. பிறகு டிவியின் மூலம் ரப்பானி வைத்தியசாலாவில் மருந்து சாப்பிட்டேன். இப்போழுது நன்றாக இருக்கிறேன்.ஆர். இந்திரா, வடபழனி



**ஆஸ்துமா:** நான் 13 ஆண்டுகளாக ஆஸ்துமா நோயினால் மூச்சுவிட முடியாமல் அவதிப்பட்டேன் . இரவு தூங்கவும் முடியாது நடக்கவும் முடியாது. ஆங்கில மருந்தும் வேலை செய்யவில்லை. பிறகு டிவியின் மூலம் விளம்பரத்தை பார்த்தேன் ரப்பானி வைத்தியசாலாவில் மருந்து சாப்பிட்டு இப்பொது நீண்ட தூரம் நடக்கிறேன். ஐஸ் மோர் குடிக்கிறேன். சாந்தி சார்லஸ்,கமலம் தெரு, புது அகரம் சென்னை –99




**சோரியாசிஸ்:** எனக்கு 14 ஆண்டுகளாக தலையில் பொடுகு இருந்தது. உடம்பில் மீன் செதில்போல் இருந்தது. எப்பொழுதும் உடம்பெல்லாம் அரிப்பு, நமச்சல் இருக்கும் எங்கேயும் செல்லமுடியமால் அதிகமாக கஷ்டபட்டேன். பிறகு டிவியின் மூலம் ரப்பானி வைத்தியசாலா விளம்பரத்தைப் பார்த்தேன் மருந்து சாப்பிட்டேன் . இப்பொழுது நன்றாக இருக்கிறேன்.டி.சிபுகுமார், பண்ரூட்டி.



**இடுப்பு வலி:** எனக்கு 2,3 வருடங்களாக இடுப்பு வலியால் உட்காரவோ நிற்கவோ முடியாது, பெரிய பெரிய மருத்துவமனை சென்று பார்த்தேன். எந்த பலனும் இல்லை பிறகு ஆப்ரேஷன் செய்யக் சொன்னார்கள் நான் பயந்து போய் விட்டேன் பிறகு புத்தகத்தின் மூலம் டிவியின் மூலம் விளம்பரத்தை பார்த்தேன்.ரப்பானி வைத்தியசாலாவில் மருந்து சாப்பிட்டேன் இப்பொழுது விவாசயம் வேலைகள் எல்லாம் நன்றாக செய்கிறேன். சிவமணி,கரிவேடு கிராமம், ஆற்காடு வட்டம்.

**பக்கவிளைவுகள், பத்தியம் ஏதும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.**



டாக்டர் ஹக்கீம் S.A. சையத்சத்தார்
**ரப்பானி வைத்யசாலா**
Old No.65, New.139,டாக்டர் பெசன்ட் ரோடு,
(மீசாகிப்பேட்டை மார்க்கெட் அருகில்) சென்னை - 14
044-28476969/28470874

**விஜய் சூப்பர் டிவியில்** திங்கள் முதல் ஞாயிற்றுக்கிழமை வரை காலை 8.00 மணி முதல் 8.30 மணி.

**கலைஞர் செய்தியில்** திங்கள் முதல் வெள்ளி வரை காலை 9.30 முதல் 10 மணி வரை

**டாக்டர் சையத் சத்தாரின் பேட்டியை காணத்தவறாதீர்கள்.**

rabbani vaidya sala www.com



**தினமும் மாலையில் ஆங்கிலத்தில் செய்திகளை படிக்க**

EVENING TAMIL NADU

www.eveningtamilnadu.com
E-mail: eveningtamilnadu@gmail.com
FB: eveningtamilnadu



**மாலை தமிழகம்**
செய்தி பிரிவு தொடர்புக்கு
செல்: 7358244058,
9176415801, 9444059392
newsmataeditor@gmail.com



மாலை தமிழகம்
செய்தியாளர் தேவை

தமிழகம் முழுவதும் மாவட்ட வாரியாக உள்ளூர்களில் செய்தி, விளம்பரம் சேகரிப்பில் அனுபவமும், ஆர்வமும் உள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.
போன் - 9444052303
இமெயில் முகவரி - newsmataeditor@gmail.com



மாலை தமிழகம்
Admin Office:
No.G 8, Phase 1,Anubhav SSR
Pankajam enclave, No.24,
Arunachalam Road, Saligramam,
Chennai - 600 093
Ph: 9840094267- 9444052303
Email: maalaitamizhagam@gmail.com